**தொடர்புள்ள பிற செய்திகள்:**

**திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் ஆசியாவை நோக்கியப் பயணங்களைப் பற்றிய ஒரு சிறப்புத் தொகுப்பு:**

**தென் கொரியா:**

**திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் முதன் முதலில் திருத்தூதுப் பயணம் மேற்கொண்ட ஆசிய நாடு தென் கொரியா. 2014 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் 5 நாட்கள் பயணமாக வந்தார். அதே சமயத்தில் ஆறாவது ஆசிய இளையோர் மாநாடு இங்கு கொண்டாடப்பட்டது.**

**திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தென் கொரியா தலைநகர் சியோலுக்கு வந்தபோது அந்நாட்டின் அப்போதைய முதன்மைக் குடிமகள் பார்க் அவர்களால் வரவேற்கப்பட்டார்.**

**கொரியன் பெனிசுலா அமைதியையும், ஒப்புறவையும் மனதில் வைத்துதான் அங்குவந்ததாக முதன்மைக் குடிமகன் மாளிகையில் பேசினார். பின்னர் சிவோல் பயணப்படகு விபத்தில் (M V Sewol Ferry Disaster) பாதிக்கப்பட்டவர்களைத் தனியாகச் சந்தித்தார்.**

**ஆகஸ்டு 15 ஆம் தேதி ஏறக்குறைய 50,000 மக்கள் கூடியிருந்த டேஜியான் உலகக் கோப்பை மைதானத்தில் திருப்பலி நிறைவேற்றினார். அப்பொழுது தொழிலாளர்களை ஒடுக்கும், புதிய வடிவில் ஏழ்மையை உருவாக்கும், மனிதத் தன்மையற்ற பொருளாதாரத் திட்டங்களை ஒதுக்கும்படி அம்மக்களுக்கு திருத்தந்தை அவர்கள் அழைப்புவிடுத்தார்கள்.**

**மேலும் குவாங்காமன் மைதானத்தில் கூடியிருந்த ஏறக்குறைய எட்டு இலட்சம் மக்கள் முன்னிலையில் 124 முதல் தலைமுறை கொரியன் மறைசாட்சிகளை அருளாளர் நிலைக்கு உயர்த்தினார்.**

**இலங்கை**

**திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13 முதல் 15 வரை இலங்கைக்கு தனது திருத்தூதுப் பயணத்தை மேற்க்கொண்டார். 13 ஆம் தேதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இலங்கை தலைநகர் கொழும்பு வந்தார். கொழும்புக் கடற்கரையில் திருப்பலி நிறைவேற்றி மறைப்பணியாளர் ஜோசப் வாஸ் அவர்களை புனித நிலைக்கு உயர்த்தினார். இவரே இலங்கையின் முதல் புனிதர் ஆவார்.**

**சமய பிளவுகளைக் கடந்து, வன்முறையை நாடாமல், எல்லா உயிரின் புனிதத்தன்மையை மதித்துப்போற்றிடும், அமைதிக்கு வழிவகுக்கும் உண்மையான முறையில், எவ்வாறு கடவுளை வழிபடமுடியும் என்பதனை உணர்த்திய, புனித ஜோசப் வாஸ் வழியில் நாமும் செல்லவேண்டும் என திருத்தந்தை அவர்கள் வலியுறுத்தினார்கள்.**

**இது 26 ஆண்டுகளாக சிங்களர்-தமிழர்களுக்கு இடையே நடந்து முடிந்த போரின் பின்னணியில் பலருக்கும் தேவையான ஒரு செய்தியாகவே**

கருதப்பட்டது. அதன்பின்பு திருத்தந்தை அவர்கள் போரினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று பார்வையிட்டார்கள்.

பின்னர் அங்குள்ள திருத்தலத்தில் செபத்தில் பங்குகொண்ட அவர்கள், அம்மண்ணில் செய்த பாவங்களுக்கும் தீச்செயல்களுக்கும் பரிகாரம் செய்யவேண்டிய அருளை வேண்டி மன்றாட அழைப்புவிடுத்தார்.

இலங்கையில் உள்ள மக்கள்தொகையில் 7 சதவீதம் கிறிஸ்தவர்கள், 10 சதவீதம் இஸ்லாமியர்கள், 13 சதவீதம் இந்துக்கள், 70 சதவீதம் புத்தர்கள் எனக் கூறுகிறார்கள். கடந்த முறை அதாவது 20 ஆண்டுகளுக்கு முன்னர் திருத்தந்தை புனித இரண்டாம் ஜான்பால் அவர்கள் வந்தபோது புத்தர்கள் அவரைச் சந்திக்க மறுத்துவிட்டார்கள். இந்த முறை அனைத்து சமயத்தின் பிரதிநிதிகளும் திருத்தந்தையைச் சந்தித்தார்கள்.

இலங்கையில் ஒற்றுமை நிலவ அனைவரும் புனித ஜோசப் வாஸ் அவர்களின் வழியில் சமய வேற்றுமைகளைக் கடந்துசெல்லவேண்டும் எனத் திருத்தந்தை வலியுறுத்தினார்.

## பிலிப்பைன்ஸ்

2015 ஆம் ஆண்டு ஜனவரி 15 முதல் 19 வரை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு திருத்தூதுப் பயணம் மேற்கொண்டார். இவர் பிலிப்பைன்ஸ் நாட்டிற்குச் செல்லும் மூன்றாவது திருத்தந்தை ஆவார். நம் திருத்தந்தையின் பயணத்தின் நோக்கம் பரிவும் இரக்கமும்.

அவர் மணிலா நகரிலிருந்து மேலும் சில நகரங்களுக்கும் சென்றார். குறிப்பாக ஒலாண்டாவில் கையன் பெரும் சூராவளியில் பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்தார்.

பிலிப்பைன்ஸ் மக்கள் திருத்தந்தை அவர்களை பிரான்சிஸ் தாத்தா என்று அழைத்தார்கள். திருத்தந்தை அவர்கள் டக்லோபன் தீவிற்குச் சென்று, அங்கு சூராவளியால் பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து, அவர்களோடு திருப்பலி நிறைவேற்றி, உணவருந்தினார்.

ஏற்கெனவே அதாவது டிசம்பர் 2014 ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டிருந்தத் திருத்தந்தை பிரான்சிஸ் ஏழைகள் மையத்தை அர்ச்சித்தார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அனைத்துச் சமயத்தலைவர்களைச் சந்தித்து உரையாடினார். மக்கலா புயலின் காரணமாக அவருடைய பயணமானது சிறிது முடங்கிப்போனது.

மணிலா பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றினார். அதில் கருதினால்களும், ஆயர்களும், குருக்களும், துறவிகளும், பொதுநிலையினரும் கலந்துகொண்டனர்.

தெருவிலுள்ள சிறார்களைச் சந்தித்தார். பல சமயத் தலைவர்களைச் சந்தித்தார். சாந்தா தாமஸ் பல்கலைக்கழகத்திலிருந்து 24000 இளையோர் பிரதிநிதிகளைச் சந்தித்தார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நிறைவேற்றிய இறுதித் திருப்பலியில் ஆறு மில்லியன் மக்கள் கலந்துகொண்டனர். திருத்தந்தையின் இப்பயணம் பல்வேறு மக்களின், குறிப்பாக புயலால், சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களின் இதயங்களில் பரிவையும், இரக்கத்தையும் உணரும்படியாக அமைந்தது.

## பர்மா (மியான்மார்)

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 முதல் 30 வரை மியான்மார் சென்றார். இன்றைய மியான்மார் பர்மா என்று நம்மில் பலரால் இன்றும் அழைக்கப்படுகிறது. மியான்மாருக்குச் செல்லும் முதல் திருத்தந்தை இவரே.

அவர் மியான்மார் தலைநகருக்குச் சென்று அங்கிருந்த அரசு அதிகாரிகளைச் சந்தித்தார். 29 ஆம் தேதி பொதுத்திருப்பலி நிறைவேற்றினார். அதன்பின்னர் புத்தமத உச்ச குழுவான சங்காவைச் சந்தித்தார்.

யங்கோனிலுள்ளப் பேராலயத்தில் இளையோருடன் திருப்பலி நிறைவேற்றினார். அப்போது நற்செய்திக்கு தைரியத்துடன் சாட்சிகளாக இருக்கவேண்டும் என அவர்களுக்கு அறிவுறுத்தினார்.

மியான்மாரின் இளைஞர்களே, உண்மையில் ஒரு நற்செய்தி என ஆழமாகக் கூறினார். அவர்கள்தான் திருஅவை கிறிஸ்துவில் கொண்டுள்ள நம்பிக்கையின் உணரக்கூடிய அடையாளம். அவர்கள் கொண்டுவருகின்ற மகிழ்ச்சியும் எதிர்நோக்கும் எப்பொழுதும் மறையாது என்று உறுதியளித்தார்.

## பங்களதேஸ்

மியான்மாரிலிருந்து பங்கதேஸிற்கு திருத்தந்தை அவர்கள் பயணமானார்கள். நவம்பர் 30 முதல் டிசம்பர் 2 வரை தன்னுடைய திருத்தூதுப் பயணத்தை அங்கு மேற்கொண்டார்கள்.

எல்லாருக்கும் பொதுவாக திருப்பலி நிறைவேற்றினார். பல வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுக்குச் சென்றார். நாட்டின் முதன்மைக் குடிமகனையும், அரசு அதிகாரிகளையும் சந்தித்தார். அவருடைய இந்த திருத்தூதுப் பயணத்தின் நோக்கம் அமைதியும், ஒற்றுமையும்.

பங்களதேஸ் ஒரு இஸ்லாமிய நாடு. அங்குள்ள கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை சுமார் மூன்று அரை இலட்சம் ஆகும். கருதினால் றொசாரியோ இப் பயணத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, இவ்வாறு கூறுகிறார்:

திருத்தந்தை அவர்கள் அவருடைய அன்பு, கனிவிரக்கம், திறந்த மனப்பாங்கு, கலாச்சாரம், மதங்களைப் பற்றிய பண்முகப் பார்வையால் கிறிஸ்துவின் பிரசன்னத்தை இங்கு கொண்டுவந்தார்கள். இது பங்களதேஸ் மக்களை மிகவும் ஆழமாகத் தொட்டது. மக்கள் அனைவரும், குறிப்பாக கிறிஸ்தவர்கள் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளார்கள். ஏனென்றால் அவர்கள் திருத்தந்தையை நேரடியாக தொட்டு பார்த்து உரையாட முடிந்தது.